**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 143/2020 |
| Deposition of witness for Prosecution | : | P.W – 5 |
| Name | : | மருதையா, வயது 52 |
| Father Name/Husband Name | : | வெள்ளைச்சாமி |
| Village | : | நாலாட்டின்புதூர் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | டீ கடை வைத்துள்ளேன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of September 2022.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது நாலாட்டின்புதூரில் டீ கடை வைத்துள்ளேன். வழக்கில் இறந்த பொன்னையா என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 ஐ தெரியும். எதிரி செல்வநாயகம் என்பவரை தெரியும் அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை பார்த்தால் அடையாளம் தெரியும்.
2. தேதி எனக்க சரியாக ஞாபகம் இல்லை கடந்த 2019 ஆண்டு 4 வது மாதம் மதியம் சுமார் 02.30 மணியளவில் நான் எனது டீ கடையில் இருந்த போது விபத்தில் இறந்த பொன்னையா என்பவர் எனது கடையில் இருந்து கழுகுமலை செல்லும் ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்காக நடந்து சென்று கொண்டிருந்த போது மேற்படி ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக வந்த இருச்சக்க வாகனம் பொன்னையா என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது.
3. மேற்படி விபத்தில் பொன்னையாவுக்கு தலை, கை, கால், முதுகு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. பின்பு காயம்பட்ட நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக மருத்துவமனை அனுப்பி வைக்க நான் உதவியாக இருந்தேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. விபத்து நடந்த இடம் உங்கள் டீ கடையில் இருந்து மேற்கு பக்கம் சுமார் 200 அடி தள்ளி என்றால் சரிதான். விபத்து நடந்த சத்தம் கேட்டு தான் நீங்கள் சென்று பார்த்தீர்கள் என்றால் சரிதான்.
2. நீங்கள் சம்பவ இடத்திற்கு போகும் போது இறந்த நபர் கிழமேல் ரோட்டில் மையப்பகுதியில் கிடந்தார் என்றால் சரிதான். நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்ற பின்னர் தான் இறந்த நபரின் மகன்

கோபால்சாமி மற்றும் அருகில் இருந்த கடைக்காரர்கள் வந்தார்கள் என்றால் சரிதான்.

3. அ.சா.1 கோபால்சாமியை உங்களுக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் சிறுவயதில் இருந்து தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர்.
4. விபத்து நடந்த இடத்தின் கிழக்கு பக்கமும் மேற்கு பக்கமும் வேகத்தடைகள் உள்ளன என்றால் வேகத்தடைகள் தள்ளி தள்ளி உள்ளன.
5. அ.சா.1 உங்கள் நெடுநாள் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. விபத்துக்கு காரணம் வழக்கில் இறந்த நபரின் அஜாகிரதை தான் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.